# THE MORNING STAR.

**Vol. 62.** **Jaffna, Thursday 9th of Oct. 1902.** **No 21**

Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.


## BIRTH.

**At Araly Jaffna** on the evening of the 21st Ult. Mrs. Ratnam wife of Dr. C. S. Ratnam L.R.C. P. & S. Edin: and L.F.P. & S. Glasgow L,M. & S. Madras, District Medical Officer Chilaw, of a son.

*RECEIPTS FOR THE MORNING STAR.*

| | | |
|---|---|---|
| Avisawella | Mr. S. Ramalingam | 2.00 |
| Straits Settlements | Messrs J. S. Ambalam, S. Nallatamby, C. T. Daniel, O. Ponniah | 13.75 |
| Teldeniya | Mr. N. Chellappah | 2.00 |
| Pallai | Mr. J. C. Joseph | 2.00 |
| Uduville | Rev. S. Eliatamby | 1.25 |
| Batticotta. | Mr. S. Chinniah | 1.25 |
| Pungertive | Messrs. Ramanather & Nagalingam | 2.00 |
| Valanai | Messrs. Ramanather and | 2.00 |
| Karadive | Messrs. P. Saravanamuttu, P. Arumugam. Tilliambalam, Veluppilly, Kovinder, Maurice. Chelliah, K. Visuvanathan, Chidamparappilly, Isaac Nagalingam, Robert. Sabapathy, Charles, Kandiah. S. Saravanamuttu, Venasitamby. | 18.00 |


THE CEYLON STEAMSHIP COMPANY LIMITED.



Lady Havelock and Lady Gordon are appointed to sail from Kangesanturai for Colombo on the undermentioned dates:—

Via Paumben.

Lady Havelock 30th Sep. 1902.
" " 14th Oct. "

Via Point Pedro.

Lady Gordon 6th Oct. "
" " 20th " "

W. MATHER & SON, Agents

WHERE To See
and WHERE To Buy
The Best Articles?
You will see the HIGH GRADE GOODS
at ALEXANDER BROS. & CO.
"FLEET"
A first class Sample Bycycle
first of the kind to Jaffna, just received
Price Rs. 300 Cash.

Alexander Brothers & Co.
Importers of British & Foreign Goods,
**THE JUNCTION.**
JAFFNA.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Remittances can be made
Between,
Jaffna, Batticaloa, and Colombo
Both by wire and Draft
To and From

**Colombo and Jaffna.**

Commission on wire transfer above Rs.500.00 1°
on wire transfer under " 500.00 2°
on draft on sums above " 500.00 ½°
ondraft on sums under " 500 00 1°

**From Jaffna to Batticaloa.**

Commission on wire transfer ½°
Commission on Draft 1°

**From Batticaloa to Jaffna.**

Commission on wire transfer 1°
Commission on Draft ½°

To and from

**Colombo & Batticaloa**

Commission on wire transfer 1½°
Commission on Draft and cashing Colombo cheques ¾°/o on sums above Rs. 250.00
1o/o on sums under Rs. 250.00

**From Jaffna to Madras Calcutta & Rangoon**

Commission on Draft } Madras & Calcutta ¾°
} Rangoon 1 o/o

| | |
|---|---|
| Colombo Bankers. | The National Bank of India Ltd. |
| Madras | The National Bank of India Ltd. |
| Calcutta | The National Bank of India Ltd. |
| Rangoon | The National Bank of India Ltd. |
| Batticaloa | The Jaffna Commercial Corporation Ltd |
| Jaffna | The Jaffna Commercial Corporation Ltd |

WILLIAM MATHER.
Managing Director.

## USEFUL BOOKS.

MODERN LETTER WRITER. (SIXTH EDITION.) Containing 635 letters. Useful to every man in every rank and position of life for daily use. Re. 1, post 1 anna.

HELPS TO THE STUDY OF ENGLISH (THIRD EDITION.) Containing an exhaustive collection of Phrases, Idioms, Proverbs, with their explaminations and proper uses Rs. 3, postage 3 annas.

Every-Day Doubts and Difficulties (in reading, speaking and writing the English Language.) Third Edition Re. 1, post 1 anna.

A HAND-BOOK OF ENGLISH SYNONYMS.—Explained with illustrative sentences. Aids to the right use of *synonymous* words in composition. Re. 1, postage 1 anna.

A COMPANION TO ENGLISH GRAMMAR AND COMPOSITION:- Very useful to the Entrance candidates 8 annas, postage 1 anna.

Beauties of Hinduism. With notes, Ans, 8, post 1 anna.

Select Speeches of the Great Orators:—Vols. I & II. These books help to write idiomatic English, improve the oratorical and argumentative powers, &c. Each Volume Rs. 2, postage 1½ annas.

Solutions of 642 very important Examples in ARITHMETIC, ALGEBRA AND GEOMETRY. For Entrance and Preparatory Classes. Rs. 1 8, postage 1 anna.

Solutions of over 300 typical Examples in TRIGONOMETRY. For F. A. students. Re. 1, postage 1 anna.

By V.P. Post 2 annas extra. TO BE HAD OF (MESSRS BOSE, BANERJI & CO., 40, SUKEA'S STREET, (HARRISON ROAD CALCUTTA.


## ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1281

In the Matter of the Estate of the late Tayalmuttu wife of Chanmugam Chinnatampi of Chulipuram. Deceased,

1. Murugesar Mailvaganam and wife
2. Kuddiachchipillai of Chulipuram. Petitioners

1. Tayalpakar Chinnatampi and wife
2. Muttuppillai of Chulipuram
3. Chanmukam Chinnatampi of do
4. Chinnachchippillai widow of Visuvanatar of do

Respondents.

This matter of the Petition of Murugasar Mailvaganam and wife Kuddiachchipillai of Chulipuram praying for Letters of Administration to the estate of the above named deceased Tayalmuttu wife of Chinnatampi of Chulipuram coming on for disposal before W. R. B Sanders Esquire, District Judge on the 9th day of July 1902 in the presence of Mr. T. C. Changarappillai, Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 1st day of July 1902 having been read, it is declared that the 2 Petitioners are heirs of the said intestate and are entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to them unless the Respondents or any other person shall on or, before the 30th day of October 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 16th day of Sept. 1902 W. R. B. Sanders District Judge

## ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1283

In the Matter of the Estate of the late Chivakaman wife of Chinnatampi Kandiah of Tirunelvely Deceased,

Chinnatampi Kandiah of Tirunelvely, Petitioner

1. Velu Kasinather
2. Velu Ramoe
3. Velu Kathirasoe
4. Velu Chinnappa
5. Velu Chivakuru
6. Velu Sapapathi
7. Kanapatiyar Velu and his
8. wife Chinnappillai all of Tirunelvely, Respondents.

This matter of the Petition of Chinnatampi Kandiah of Tirunelvely praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Chivakaman wife of Chinnatampi Kandiah of Tirunelvaly, coming on for disposal before W R. B. Sanders Esquire District Judge on the 24th day of July 1902 in the presence of Mr. T. C. Changarapillai, Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 21st day of July 1902 having been read, it is declared that the Petitioner is the widower of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 30th day of October 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 16th day of Sept. 1902 W. R. B. SANDERS District Judge.

## ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1292

In the Matter of the Estate of the late Varisaiyar Chittampalam of Meesalai North Deceased.

Kathiresar Mailvaganam of Meesalai North Petitioner

Thangamuttupillai widow of Varisaiyar Chittampalam of Meesalai North Respondent

This matter of the Petition of Kathirasar Mailvaganam the abovenamed Petitioner praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Tarisaiyar Chittampalam coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge on the 26th day of August 1902 in the presence of Mr. K. Sivapragasam Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 23rd day of August 1902 having been read, it is declared that the Petitioner is the step brother of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 17th day of October 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 26th day of August 1902 W. R. B. SANDERS District Judge

## ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction No. 1295.

In the Matter of the Estate of the late Kantar Tillaiampalam of Tanankilappu Deceased.

Tankamuttu widow of Tillaiampalam now wife of Namasivayam Kantar of Tanankilappu Petitioner.

1. Murugar Vaitilingam of Madduvil
2. Murugar Sinnatamby of Tanankilappu Respondents

This matter of the Petition of Tankamuttu widow of Tillaiampalam now wife of Namasivayam Kantar praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kantar Tilliampalam coming on for disposal before W. R. B. Sanders Esquire District Judge, on the 10th day of September 1902 in the presence of Mr. Tambyah S. Cooke, Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 6th day of Sept. 1902 having been read, it is declared that the Petitioner is the widow of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to her unless the respondent or any other person shall on, or before the 15th day of Oct. 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 10th day of Sept. 1902. W. R. B. SANDERS. District Judge

## Local and General.

**Weather.** Showers have fallen very generally all over the peninsula and the farmers have finished their sowing. The paddy plants from the earlier sowing look well in spite of the want of rain. As we go to press a deluge of rain is falling which we fear will drown out the young plants in many places.

**Annual Convocation.** The annual convocation of the churches connected with the American Mission will be held next week Friday the 17th inst at *Batticotta* instead of Oodooville as first proposed. Rev. G. G. Brown will conduct the meeting and it is hoped that a large number will be present. Let as many as possible come praying that God may richly bless all those who come together and through them bless those not able to be present.

**Missionaries.** Messrs. G. S. Eddy, V. Azariah and A. Paramanandam, arrived from India via Colombo, on Saturday evening the 4th inst. Their plan of work is noticed elsewhere in our columns.

**Advocates Final.** Mr. Kanagasapai of Tinnevally an old boy of Jaffna College, has passed the Advocates Final examination. Also Mr. Balasingham C. son of our retired Magistrate C. W.Cathiraveluppillai Esq.

**Public Roads.** During the past few months some of the roads in the peninsula have been repaired. We would call the attention of the authorities to the very unsatisfactory way in one or two have been done.

**Bible Society Meeting.** The Jaffna Auxiliary Bible Society will hold its 64th anniversary at St. Peter's Wesleyan church, Jaffna, on Monday the 13th inst. commencing at 6 P. M. Sir W. C. Twynam K. C. M. G. will take the chair and Messrs Hanan, Bicknell, Lockwood, Joseph, Solomon and Williams are to handle the resolutions. This society is doing a good work and we urge all its friends to render all needed help.

**Kangesanturai.** This port is now soon to be closed for the north monsoon. The next island steamer north about is expected to call at Mandative.

**Salt rent for 1903.** The Govt- Agent put up for sale on the 5th inst at the Jaffna Kachcheri the monopoly of selling salt for next year. There was a keen competition and the Chetty firm of Mona Ravanna Mana Ana by its Agent Sanmugamchetty was declared the purchaser of the rent for Rs. 60,620. About Rs. 3,000, over and above last year's sale *Com*

**Obituary.** With much regret we record the sad news of the death of Dr. D. P. Nicholas Medical officer at Kalmunai on the 1st of this month. The deceased had his education in Jaffna College, from where he joined the medical College Colombo. Having finished his medical studies in Colombo he was employed by Govt. for about 15 years at several stations in the island. His health failing, he obtained three months leave with a view to return to Jaffna. And it is indeed sad that the disease to which he was a prey appears to have been of so serious a nature, that he rapidly succumbed to it. The deceased was married to the first daughter of the late Dr. Wm. Paul of the Jaffna F. N. S. whom and her two sons he has left behind to bemoan his loss. Our deep sympathies are with the unfortunate widow and child. May the Lord give them His peace is our prayer. *Com.*

**"S. S. Claverlely."** arrived from England at Kangesanturai about a week ago with Railway materials. The landing of the materials by Messrs Mather and Sons will be over by to-day. The sea at Kangesanturai is very unfavourable and Messrs Mather and Sons are doing all in their power to expedite the landing in spite of the unfavourable weather. *Com.*

(Continued on page 4.)

# உ த ய தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

கஉம் புத்தகம்.] யாழ்ப்பாணம், க௯௦உம் ௵ ஐப்பசி ௴ கூவ வியாழக்கிழமை. [சங்கியை, உக



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின

புகைக்கப்பல்கள் பின்வரும் தேதிகளில்கொழும்புக்குப்போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| கோட்டன்காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாக | 1902. ஐப்ப. ௴ 6௳ |
| | " " 20 |
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாக | " புரட் 30 |
| | " ஐப்பசி 14 |
| | " " |

W<sup></sup>M MATHER & SON. Agents


### கடிதக்காரருக்கு.

கடிதமெழுதுவோர் வாசித்துவிளங்கத்தக்க நல்லமையினால் காகிதத்தினேர்பக்கத்தில் எழுதியனுப்பும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம்.


### விளம்பரம்.

சேலம் ஒட்டுமாங் கன்றுகளும் வேண்டிய பலஜாதி பழவகைச் செடிகளும் சீமை காய்கறி விதைகளும் புஷ்ப விதைகளும் நாட்டுக் காய்கறி விதைகளும் இதில் மாசால் பில் விதைகளும் சகாயமானவிலைக்கு அனுப்பிவைக்கிறேன். வேண்டியவர்கள்எழுதிக்கொண்டால் 1902 வது வருஷத்திய புதியகேட்லாக் இங்கிலிசும் தமிழுமாய் தயார் செய்திருப்பதை அனுப்புகிறேன்.

ச. கொ. இ. அப்துல்றகிமான் சாப்பு,
விதைகள் மாங்கன்று வியாபாரி.
குமாரசாமி பட்டி ரோட். சேலம்.


## உ த ய தா ர கை.

க௯௦உம் ௵ ஐப்பசி ௴ கூ௩வ.

### அழகு.
### Beauty.

இவ்வுலகின்கணுள்ள மானிடசன்மத்திற்குள் அழகென்பது ஓர் விசேஷ ஆபரணமேயாகும். ஒரு தேசத்தார் அழகென்று புகழ்கிறதை மற்றொருதேசத்தார் அந்தக்கேடென்று இகழ்கிறார்கள், இதற்கேற்ற பழமொழியும் ஒன்றுண்டு: அதாவது:—"ஒரு ஊருக்குப் பேச்சு இன்னொரு ஊருக்கு ஏச்சு" என்பதுதான். எப்படியென்றால், இந்தியாவிலுள்ள ஸ்திரீகளுக்குள்ளேயே சிலருக்கு காதைத் தோள்வரைநீடித்து நகைகளணிந்துகொள்வ தழகென்பதும், சிலருக்கு மூக்கை வடுப்படுத்தாமலிருப்பதே அலங்காரமென்பதும் கொள்கைகளாயிருக்கிறது. ஆனால் காதைநீடிக்காது கம்மல்போடுவதும், மூக்கைத் துளைத்து அதில் மூக்குப்பொட்டு மூக்குத் தொங்கட்டம், நத்து முதலான ஆபரணங்களையணிந்துகொள்வதும் பலருடைய விருப்பமாயிருக்கிறது. இப்படியாக அழகைக்குறித்து ஒரேதேசத்தில் இவ்வித வெவ்வேறு அபிப்பிராயங்களிருந்தால் இப்பரந்த பூவுலகின்கண் எவ்வளவு வித்தியாச அபிப்பிராயங்களிருக்கவேண்டுமென்று இதை வாசிக்கிற நண்பர்காள்! நீங்களே கவனித்தறியவேண்டும்.

காப்பிரிகள் மூக்கு சப்பையாயிருந்தால் அழகு என்பார்கள். சீன ஸதிரிகளும் சீயம் தேசத்து ஸ்திரீகளும் நீண்டநகங்களை அலங்காரமென்றெண்ணி அவைகளை வளர்ப்பார்கள். யூசர்களும் துருக்கிதேசத்தாரும் சரீரம் நன்றாய்க் கொழுத்துப் பருமனாயிருந்தால் அழகு என்பார்கள். இதற்காகவே அவர்கள் தங்கள் ஸ்திரீகளுக்கு நெய்ச்சாரமும் பெலனுமுடைய ஆகாரத்தைக் கொடுப்பார்கள். சீனர்கள் சிறிய பாதத்தைப் பெரிய அழகென்பார்கள். அவர்களுடைய கவிராயர் தங்கள் தேசத்து ஸ்திரீகளினுடைய அழகைப்பற்றி வர்ணிக்கும்பொழுது அவர்களுடைய சிறிய பாதங்கள் வில்விபுஷ்பங்களையும், அதினால் அவர்கள் நடக்கச் சக்தியில்லாமல் மெதுவாய் நொண்டி நடப்பது வில்விபுஷ்பம் காற்றினால் அடிபட்டு அசைக்கப்படுவதையும் ஒத்திருக்கின்றன வென்பார்கள். பார்சியர் சப்பைமூக்கைப்பற்றிப் பரிகாசஞ்செய்து உயர்ந்தெழும்பிய மூக்கைப்பற்றிப் புகழுவார்கள். நாகரீகமில்லாத்தேசத்தார்கள் தேகமுழுமையும் பச்சைகுத்திக்கொள்வது அழகென்பார்கள்.

நியூசீலந்து, நியூகின்னி வாசிகள் மூக்கு, காது, நெற்றி முதலானவிடங்களில் மிருகத்தின கொம்புகளையும் பட்சிகளின் இரக்கைகளையும் போட்டுக்கொண்டு, கொம்பினாற்செய்த ஒருவித ஆபரணத்தினால்உதட்டையும் நீட்டிக்கொள்வது அழகு என்பார்கள்.

பொய்யழகைப்பற்றி ஒரு கவிராயர்செய்தவெண்பாவைக் கவனியுங்கள்.

"மெய்யழகு மாதர்காள் மேதினியில் உங்களுக்குப்
பொய்யழகென்றே அறிவீர் புத்தியது—மெய்யழகு
கற்படக்கம் நாணம் கணவன்ஸதிரீ அறிதல்
விற்பனமோ டுண்மை விருப்பு"

மேற்சொன்ன இந்த வெண்பாவிலே சொல்லியிருக்கிறபிரகாரம் இவைகளெல்லாம் பொய்யழகேயாகும். எல்லாருக்கும் நன்மைசெய்பவராகிய கடவுள் அவரவர்களுக்கு வேண்டிய அழகை இயல்பாகத்தந்திருக்க நாம் பலவித முகரூபையும் சரீர நிறத்தையும் தேடுவதுஅனுவசியமாயிருக்கின்றது.

ஆகையால் நீங்கள் மேற்சொன்னவைகளை யெல்லாம் அகற்றிவிட்டு தேகத்தின் சுத்தவிர்த்திக்கும், சுகவிர்த்திக்கும், ஆத்துமத்தின் அழகுக்கும் அலங்காரத்திற்கும், எற்றவைகள் எவைகளோ அவைகளை ஆசையோடு தேடுவது அவசியமேயாகும்.

### மகுடாபிஷேகமகாசபை.
### The Delhi Coronation Durbar.

மகத்துவந்தங்கிய இராசசக்கிரவர்த்தியாகிய ஏழாம் எட்வேட் அரசர் அவர்களின் மகுடாபிஷேகத்தை இந்தியாவிலும் பிரசித்தப்படுத்திக் கொண்டாடும் நோக்கமாய் இந்திய இராசபிரதிநிதியாகிய லோட் கேஷன் அவர்கள், வருந் தைமாசத்தில் வட இந்தியாவிலுள்ள தெல்லிமாநகரத்திலே யோர் பெருஞ் சபை கூட்ட ஆயத்தங்கள் செய்வதைப்பற்றிப் பலரும் அறிந்திருத்தல் கூடும். இவ்வுற்சவம் அதிஆடம்பர வைபவங்களுடன் நடைபெறப்போகின்றது. இந்தியாவிற் பூர்வீகத்தில் விசேஷம்பெற்ற நகரங்களுட் தெல்லிநகரு மொன்று. மோகல் ராசாக்கள் காலத்தில் இந்நகர் தலைநகராகி இராச அரண்மனைகள், மாடமாளிகைகளாற் சிறந்து விளங்கிற்று. அங்குள்ள தாஜமகால் முதலிய விசித்திர விநோத கட்டடங்கள் உலகம் முழுவதிலும் விசேஷம்பெற்று விளங்குகின்றன. பாரதயுத்தம் நடைபெற்ற குருச்சேத்திரபூமியும் இதற்கணித்தானதேயாம். இவ் விசேஷங்களைக் கவனித்தே லோட்கேஷன் அவர்கள் மகுடாபிஷேககொண்டாட்டத்திற்காய் இவ்விடத்தைத் தெரிவுசெய்தனர். கொண்டாட்டத்தினத்தின் வசதிக்காகவும் பல விசித்திர மாளிகைகள் புதிதாயெழுப்பப்படுகின்றன. 20,000 கூலியாட்கள் நாள்வீதம் வேலைசெய்துகொண்டு நிற்கின்றனர். அத்தருணத்திற் சேனைகளை யொருங்குசேர்த்துப் பவனிசெய்வதற்காக எட்டரை லட்சம் ரூபாவும் மற்றுஞ் செலவுகளுக்காக முப்பதரை லட்சம் ரூபாவும் செலவிட இந்திய அரசாட்சியார் தீர்மானித்திருக்கின்றனர். இக்கொண்டாட்டத்தில் இராயரின் சகோதரராகிய கொன்னோற் பட்டவர்த்தனர் சமுகமாயிருப்பர். இங்கிலாந்திலிருந்து வேறும் பல மகான்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். இலங்கையிலிருந்து போவோருள் வித்தியாகர்த்தர் மெஸ். எஸ். எம். பரோஸ் ஒருவர். இவர்கள் தம் சொந்தச் செலவிலேயே போவார்கள், தெல்லிநகரின் கொண்டாட்டத்துக்கு மொத்தமாய் 90 லட்சம் ரூபாய் செலவாகப்போகின்றதென்பது ஒருவரின் கணிப்பு.

தெல்லிமாநகரில் இக்கொண்டாட்டம் நடைபெறும் நாட்களிலே இந்திய கைத்தொழிற் பொருட்காட்சியுமொன்று நடைபெறுவதற்கு இந்திய பிரதிகாவலர் ஒழுங்குசெய்திருக்கின்றனர் இந்தியாவில் ஆங்காங்கு காணப்படுங் கட்டடங்களையும் சித்திர வேலைப்பாடுகளையும், கைத்தொழிற் பொருட்களையுங் கவனிக்குமிடத்து, இத்தேசம் பூர்வீகத்தில் அதி நூதனசித்திரவேலைகளிலும், கைத்தொழில்களிலும் சிறந்து விளங்கியதென்பது தெளிவாகும். ஆயினும் இத்தொழிலாளர் தம்முயற்சியாற் போதிய ஆதாயமடையும் வழியறியாதாராய்ப் படிப்படியாய்த் தமது தொழில்களைக் கைசோரவிட்டுப் பசிபட்டினியால் வருந்துவாராயினர். இத் தொழில்களை மறுபடியும் உயிர்ப்பித்துப் பஞ்சத்தால் வருந்துஞ் சனங்களுக்குப் பிழைப்புக்காட்டும்நோக்கமாகவே மகுடாபிஷேக கொண்டாட்டநாட்களில் இந்தியாவெங்குமுள்ள நூதன கைத்தொழிற் பொருட்களை ஒருங்குசேர்த்துக் காட்சிகாட்டத் தீர்மானித்தனர். பொருட்களைச் சேகரஞ்செய்யும்பொருட்டு டக்தர் உவாட் என்னும் பண்டிதர் நியமிக்கப்பட்டனர். இவர் இந்தியாவெங்குஞ் சென்று ஆங்காங்குள்ள நூதனப் பொருட்களைப் பரிசோதனைபண்ணி, அவற்றையெல்லாம் புதுப்பித்துத் தெல்லிநகர்க் காட்சிச்சாலைக்கனுப்பும்படி மாகாண அதிகாரிகளுக்குக் கட்டளை கொடுத்துப் போயிருக்கின்றனர். வெகுகாலத்தின்முன் விடப்பட்டு அழிந்துபோன சிலவேலைகளையுங் கண்டுபிடித்து அவற்றைப் புதுப்பித்துச் செய்தனுப்பும்படியுங் கட்டளைபண்ணினர். மேலிந்தியாவிலுள்ள பீஜாப்பூரில் 400 வருடங்களின்முன் செய்யப்பட்ட கம்பளவேலைகளைக் கண்டுபிடித்து அவற்றையும் அனுப்பும்படி கட்டளைகொடுத்தனர். பீஜாப்பூரின் வெள்ளித் தாம்பாளவேலைகள், தென் கன்னடத்தின் சந்தனமரச் சித்திரவேலைகள், கோலாப்பூரின் பொற்றாம்பாளவேலைகள், பூனாவின் பித்தளைத் தாம்பாளவேலைகள், பம்பாயின் நூக்கமரச் சித்திரவேலைகள், கச்சின் வெள்ளிப் பொன்தகட்டுவேலைகள். சிந்துதேசத்தின் பாத்திரவேலைகள், ஆதியவற்றையெல்லாம் உவாட் பண்டிதர் கண்டு பிரமிப்புற்று அவற்றைத் தெல்லிநகர்ப்பொருட்காட்சிக்கனுப்பும்படி ஒழுங்குசெய்தனர். தெல்லிநகர்க் கொண்டாட்டத்துக்காய்ச் சுதேசராசாக்களும் பெருந்தொகைப்பணஞ் செலவழித்திருக்கின்றனர். தைமாதத்திற் தெல்லிநகர்க்காட்சி வெகுமாட்சியாயிருக்கும்.

### யாழ்ப்பாணம்.

காலநிலை.—Weather.—முன்விதைப்புப் பயிர்கள் வாடிச் செத்துப் போகிற தருணத்திலே மழை வந்து குறுக்கிட்டு அங்குமிங்குஞ் சிறுகச் சிறுகப் பெய்திருக்கின்றது. சில விடங்களிற் பயிர் முழுவதுஞ் செத்துப் போனமையால் வயல்கள் அழித்து விதைக்கப்பட்டன. மறுபடி விதைக்கப்பட்ட விதை முளைகொள்ளவே மழைவெள்ளம்போட்டதால் சிலவிடங்களில் பயிரழிதற்கேதுவாயிற்று. முந்தின விதைப்புப் பயிர்களுக்கு வெள்ளம் வாய்ப்பாயிருக்கிறது.

எழுப்புதற் கூட்டங்கள்—Revival Meetings.—கிறீஸ்த முயற்சிச் சங்கத்தின் கீழாய் இந்தியாவிற் சுவிசேஷ வேலை நடத்துபவராகிய மெஸ். எதி யாழ்ப்பாணம் வந்து கிறீஸ்த சபைகளைச் சந்தித்து எழுப்புதற் கூட்டங்கள் நடத்துகின்றனர். மூன்று மிஷன்களிலுமுள்ள கிறீஸ்தவர்களின் நன்மைக்கான ஆலோசனைக் கூட்டங்கள் வருகிறகிழமை 14 ம், 15 ம், 16 ம் திகதிகளில் யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளிருக்கும் பெரிய ஆலயத்திலே வைக்கப்படும். யாழ்ப்பாணமெங்குமிருந்து கிறீஸ்தவர்கள் திரளாய் வந்து கூடி விசேஷ எழுப்புதலடைந்து போவார்கள். இக்கூட்டங்களுக்கு ஆயத்தமான எழுப்புதற் கூட்டங்கள் இந்தக் கிழமை மானிப்பாய், நல்லூர், பருத்தித்துறைஎன்னுமிடங்களில் நடைபெறுகின்றன. இக்கூட்டங்களுக்கும் பலர்சென்று விசேஷ அறிவையும் எழுப்புதலையுமடைகின்றனர். இன்று காலை மெஸ். பரமானந்தம் "தேவன் ஒருவரையும் நோக்கிக்காதிருக்கவேண்டு" மென்ற விஷயத்தின்பேரிலும், மெஸ். அசரையா எல்லாவற்றையும் விட்டுப் பின்சென்றார்களென்ற விஷயத்தின் பேரிலும், மத்தியானம் மெஸ். எதி ஐயரவர்கள் பவுல் அப்போஸ்தலனுடைய சீவியசம்பந்தமாய்க் கிறீஸ்த ஊழியகாரருடைய வட்சணங்களென்ற விஷயத்தின்பேரிலும் கேட்டோர்க்கின்பம் பயக்கத்தக்க அவ்வளவு தெளிவாய் மிகுந்தவைராக்கிய சிந்தையுடன் பேசினர். தேவசமுகங் கூட இருந்தது. தேவாவியானவரே பேசினாரென்பதில் மயக்கமில்லை. கூட்டங்கள் எவ்வளவு மும்முரமாய் நடைபெற்றதோ அவ்வளவாய் மழையும்மும்முரங்காட்டியது. எப்படியோ கிறிஸதவர்களுக்கு மிகுந்தஆசீர்வாதத்தைக்கொடுக்கத்தக்கநாளாயிருந்ததென்பதற்குச்சந்தேகமில்லை. மானிப்பாய்த் தேவாலயத்திற் கனம். ஸ்கொற் வைத்தியரின்முகாமைக்கீழ் நடைபெறுங் கூட்டங்களில், முன்னேரக் கூட்டங்கள் எல்லாக் கிறீஸ்தவர்களுக்கும், பின்னேரக் கூட்டங்கள் வளர்ந்த ஸ்திரீகள் புருஷர்களுக்கும், இராக்கூட்டங்கள் கிறீஸ்தவர்கள், கிறீஸ்தவர்களல்லாதோராகிய இருபாலாருக்குமாக வைக்கப்படும்.

மெஸ். எதி ஐயரின் உதவியாட்களாய் அவருடன் கூடித் தென் இந்தியாவில் வேலைசெய்பவர்களாகிய மெஸ். அசரையா, பரமானந்தமென்பவர்களும்இக்கூட்டங்களிற் பங்குபற்றி நடத்தும்படியாக யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர்.

வருடாந்தக்கூட்டம்—Annual Convocation. யாழ்ப்பாணஅமரிக்கமிஷன் கிறீஸ்தசபைகளின் வருடாந்தக்கூட்டம் இந்தமாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டைத்தேவாலயத்திலேநடத்தப்படும். உடுப்பிட்டிப்பகுதியின் மிஷனரியாகிய கனம் பிறவுன் ஐயர் சபாநாயகராகியிருந்து கூட்டத்தைநடத்துவர்.

உப்புக்குத்தகை.—Salt rent. இந்தவருடம் உப்புக் குத்தகைகாரராகிய செட்டியாரே யாழ்ப்பாணம் டிஸதிறிக்கின் 1903 ம் ஆண்டுக்குரிய உப்புக்குத்தகை 61000 ரூபாவாய்க் கையேற்றிருக்கின்றனர்.

புகைவீதி. Railway. பழைவரைக்கும் வண்டிகளோடத்துவங்கியபின வரும்படி எறக்குறைய இருமடங்காயிற்றாயினும், வேலையாட்களுக்குக் கட்டக்கூடியதாயிருக்கவில்லை. யாழ்ப்பாணப் புகைவீதியில் வேலையாயிருந்த உயர்ந்த சம்பளக்காரர் வேறு இடங்களுக்கு அனுப்பப்படக் குறைந்த சம்பளகாரரே அவர்களின் இடத்துக்கு வைக்கப்பட்டிருக்கின்றனர். சாவகச்சேரிக்கும் பழைக்குமிடையிற் புகைவீதி இன்ஸ்பெக்றராகிய மெஸ். சில்வா என்பவர் மாதம் 50 ரூபா சம்பளத்தோடு நியமமாயிருக்கின்றனர்.

சென்ற மாதம் 15 ந் திகதி திறக்கப்பட்ட களனிப்பள்ளத்தாக்குப் புகைவீதியில் நல்லவரும்படி வருகின்றது. அங்குநாள்வீதம் 528 ரூபாவருமானமாக, யாழ்ப்பாணத்தில் வரும்படி நாள்வீதம் 90 ரூபாவரையிலாம்.

தேகவியோகம்.—Obituary. மட்டக்களப்புப் பகுதியைச்சேர்ந்த கல்முனையிலே அரசாட்சி வைத்தியராயிருந்தவராகிய டக்தர் பி. நிக்கலஸ் காலஞ்சென்று போயினரென்னுந் துக்க சங்கதி சடுதியாய் யாழ்ப்பாணமெட்டிற்று. இரண்டோர் கிழமைகளால் லீவில் யாழ்ப்பாணம் வரவெண்ணியிருந்த இவரைப்பற்றி யிவ்வித சங்கதி யெட்டுமென ஒருவருங் காத்திருக்கவில்லை. செல்வர்கள் சுகசீவிகளைப்பற்றி வருத்துவதாகி

ய நீரிழிவு நோயே இவரின் சடுதி மரணகாரணமாயிற்று. சாவகச்சேரியைச் சொனவூராய்க்கொண்ட இவர் முன் யாழ்ப்பாணக் கல்லூரியிற் கல்விகற்றுப் பின் கொழும்பு வைத்தியகல்லூரியிற் சேர்ந்து வைத்தியங்கற்று முடித்தனர். ஆபத்துக்குதவி வைத்தியசாலை வைத்தியராயிருந்த டக்தர் உவில்லியம் போலின் மூத்த புத்திரியை விவாகஞ்செய்து சீதாரியே தமது வாசஸ்தானமாக்கினர். இலங்கையின் பலபகுதிகளிலும் அரசாட்சிவைத்தியராய்க் கடமைபார்த்தவர், யாரும் விரும்பி நேசித்துப் பாராட்டற்குரிய சிறந்த லட்சணங்கள் பொருந்திய உத்தம கிறீஸ்தவர். நடுப்பிராயத்திலே அவரை அழைத்துக்கொள்வது தேவனின் சித்தமாயிற்று. இவரது மரணத்திற் துயருறும் அரியமனைவி பிள்ளைகளுடனும் சுற்றத்தவர் சினேகிதருடனும் நாமுமனுதாபப்படுகின்றோம்.

ஆட்கள்.—Personal—சேர். யோசேவ் உவெஸ்றிட்சுவே தேசாதிபதியவர்கள் இந்தமாதம் 27ந் திகதி வரையில் இலங்கைவந்து சேர்ந்து ஆளுகைப்பொறுப்புக் கையேற்று அடுத்தமாதத் துவக்கத்திற் சட்டநிருபணச்சபையை ஆரம்பிப்பார்.

கொழும்பிலே அரசாட்சிப்பகுதியில் வைத்தியராயிருந்த டக்தர் சரவணமுத்து உபகாரச்சம்பளத்தோடு உத்தியோகத்தா விளைப்பாறுகின்றனர். அவருடைய இடத்துக்கு டக்தர் எ. சிற்றம்பலம் நியமிக்கப்படுவாராம்.

இங்கிலந்திலிருந்து திரும்பி வந்தவர்களாகிய தமது மாமனுரையும் மனைவியையும் சந்திக்கும்படி கொழும்பு சென்றவராகிய அப்புக்காத்து மெஸ். திருநாவுக்கரசு சமுசாரசகிதராய்மறுபடியும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

மத்தியமாகாணத்திலிருந்தவித்தியாதரிசியாகியமெஸ் உவாக்கரின் இடத்துக்கு நியமிக்கப்பட்டவராகிய மெஸ. ஸ்கிறிச்லஉட் இலங்கைவந்து தமதுகடமை கையேற்றனர்.

மட்டக்களப்பிலே உப்புக்கந்தோர்த்தலைவராய் நியமிக்கப்பட்டிருந்தவராகிய மெஸ். பொன்னையா அரசாட்சியாரின் பணத்தை அபாவனைசெய்தாரெனக்கண்டுபிடிக்கப்பட்டமையால் உபதேசாதிபதியவர்கள் அவரை வேலையிலிருந்து நீக்கியதோடு அவருக்குக்கொடுத்த முதலியார்ப் பட்டத்தையும் எடுத்துப்போட்டனர்.

அம்பாந்தோட்டையி லிருந்தவராகிய மெஸ். என். எஸ். டுல் 5000 ரூபாபிணைக்கொடுத்துஇவ்வேலையைப் பார்க்கும்படி நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

சிலமாசங்களின்முன் தரணிமார்க்குரியபரீட்சைகடந்தவரும் நீதவான் மெஸ். கு. கதிரவேற்பிள்ளையவர்களின் மருசருமாகிய மெஸ். ஸ. கதிரேசு யாழ்ப்பாணத்திலே வேலைபார்க்கும்படி உத்தரவு பெற்றுவந்திருக்கின்றனர்.

குற்றவாளிகள்தொகை—. Number of Criminals.- 1901ம் ஆண்டிலே இலங்கைக் கோடுகளில் விளங்கப்பட்ட வழக்குகளைப்பற்றி சொலிசிற்றர் ஜெனறல் மெஸ். இராமனுதன் எழுதிய றிப்போட்டின்படி இலங்கையிலே தீச்செயல்கள் வரவர அதிகப்படுகின்றனவென்றும், குற்றவாளிகளின் தொகை கூடுகின்றனவென்றும், தெளிவாகின்றது. இது இலங்கை அரசாட்சியாரும் இலங்கையின் நன்மையை விரும்பிக் கிரியை செய்பவர்களுங் கவனிக்க வேண்டிய வோர் விஷயம். குற்றவாளிகளாய் மறியலுக் கனுப்பப்பட்டோரில் சிங்களவர் 4911 பேர், தமிழர் 1420 பேர், சோனகர் 392 பேர், மலாயர் 25 பேர் பேகர் 59 பேர், ஐரோப்பியர் 39 பேர்: மறுபேர் 92 பேர். இடவீதப்படி பார்த்தால் பாரதூரமான குற்றத்தில் பலப்பிட்டியா முதலாயும், மன்னுர் கடைசியாயும் நிற்க, சாதாரண குற்றத்தில் காற்றன் முதலாயும் வவுனியா கடைசியாயும் நிற்கின்றன. அவ்வச்சாதிக் குடிசனவீதப்படி பார்க்குமிடத்துத் தமிழ்ச்சாதியைச் சேர்ந்த குற்றவாளிகளின் தொகையே ஆகக்குறைந்ததாம்.

முத்துக்குளிப்பு—Pearl Fishery.— இங்கிலந்திலிருந்து வந்து முத்துச் சிப்பிப்பார்களைப் பார்வையிட்டுப்போன கேட்மன் பண்டிதரின் ஆலோசனைப்படி, அவரின் உதவியாளாய்ச் கடமை பார்த்தவராகிய மெஸ். கோணெலும், சப்றின் லெக்கியும் இந்த மாதம் முத்துச் சிப்பிப்பார்களை மிகக் கவனமாய் ஆராய்வு செய்யப் போகின்றனர். வரும் வருட முத்துக்குளிப்பு இவர்களுடைய ஆலோசனையிலேயே தங்கியிருக்கின்றது. இவர்களிப்போது ஒருதொகையான சிப்பிகளையெடுத்துக்கழுவி யென்ன வருமபடிக் கிடமிருக்கின்றதெனப் பார்க்கப்போகின்றனர். அத்தோடு, மோசத்துக் கிலக்கான பார்களிலுள்ள சிப்பிகளை ஆயிரக்கணக்காயெடுத்து ஒதுக்கான பார்களில் நாட்டப் போகின்றனர். மெஸ். கோணெல் காலியிலே இவ்வித மாறுதல் செய்ததினுல் நல்ல அனுகூலமடைந்து முத்துச் சிப்பிகளுக்குண்டாகுஞ் சில நோய்களின் காரணங்களையுங் கண்டு பிடித்திருக்கின்றனராம்.

ஒய்வுநாட்பள்ளிக்கூடங்கள்.—Sunday Schools.- இந்திய ஓய்வுநாட்பள்ளிக்கூட ஐக்கிய சங்கத்தவர்கள் இந்தியா இலங்கை எங்குமுள்ள ஓய்வுநாட்பள்ளிக்கூடங்களில் தேவ ஆசீர்வாதமுண்டாகும்படி இந்த மாசம் 19ம், 20ம் திகதிகளில் விசேஷ பிரார்த்தனைகள் செய்யப்படவேணுமென்று சகல கிறிஸ்தவர்களையும் வேண்டிக்கொள்ளுகிறுர்கள். யாழ்ப்பாணத்திலும் அத்திகதிகளில் விசேஷசெபக்கூட்டங்கள் கடைபெறும். மெஸ். எதி சில கூட்டங்களை நடத்துவார்.

## பிறதேச வர்த்தமானம்,

சென்ற மாதம் 11ந் திகதி சென்னையிலிருந்து புறப்பட்டு பம்பாய்க்குப் போன தபாற் புகைவண்டிக்கு நேர்ந்த விபத்து மிகப்பயங்கரமானது. சென்னையிலிருந்து 205 மைல் தூரத்திலும் கடப்பையிலிருந்து 44 மைல் தூரத்திலுமுள்ள மங்கப்பட்டினம் என்னும் ஸ்தானத்துக்கணித்தாய் ஓர் சிற்ருற்றின்மேலிடப்பட்டிருந்த பாலம் பெருமழை யடித்துப் புரண்டோடிய வெள்ளத்தா லள்ளுண்டு போயிருக்க, இதையறியாது பிற்சாமம்மூன்றரை மணிவரையி லவ்விடத்தோடியவண்டிகள் ஆற்றுள் விழுந்துடைந்து வெள்ளத்தாலள்ளுண்டு போக அதிலேறிச் சென்ற நூற்றுக்கணக்கான சனங்களும் சேதப்பட்டனர். மழை அதிகமாய் வருஷிக்க எங்கும் அதி இருட்டா யிருந்தபடியால் ஒருவருக்கும் பாலத்தின் அழிவு தெரியவில்லை. ஆற்றுள்விழுந்த சனங்கள் பட்ட அவதி கொஞ்சமல்ல. அறிவு கெட்டு மடிந்தார் சிலர், சலத்தில் மூழ்கி மடிந்தார் சிலர், வண்டிகளில் மோதியும், அவற்ருல் நெருக்குண்டும் இறந்தார் சிலர், இப்படியாய் நூற்றுக்கணக்கானேர் மடிந்தனர். தப்பிப்பிழைத்தோர் தொகை 42. இவைகளிற் சிலர் வெள்ளப் பிரவாகத்தாற் கரையிலெறியப்பட்டனர். சிலர் தமக்ககப்பட்ட தடி தண்டுகளைப் பிடித்துக் கொண்டு விடியுமட்டும் நீரிலிருந்து மீட்கப்பட்டனர். சுத்தோவிக்க குருமார் நால்வர் அதிசயமானவகையாய்த் தப்பினர். உயிர் தப்பினேருட் பலர் கால் கை முறிந்து காயப்பட்டவர்களாய் ஆஸ்பத்திரியிற் கிடக்கின்றனர். உச்சி முதல் உள்ளங்கால் வரையில் விலையுயர்ந்த ஆபரண மணிந்திருந்த பிராமண ஸ்திரியின் பிரேதமு மொன்று கரையிலிருந்தெடுக்கப்பட்டது. லட்சத்தெழுபத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஆபரணங்களுடன் சென்ற நகைவியாபாரி யொருவரும் மாண்டனர். மடிந்தோர் தொகை இன்னும் திட்டமாய் அறியப்படவில்லை. கரையிலும் நீரின்மேலும் ஏறக்குறைய நூறு பிரேதங்களெடுக்கப்பட்டன. ஐயையோ! பரிதாபம்.

பூமியதிர்ச்சியினுற் கட்டடங்கள்விழப்போகின்றனவெனச் சோதிடமுரைத்துச் சனங்களுட் பெருங்கலக்கத்தையுண்டாக்கிய திண்டுக்கற் சோதிடர்க் கெதிராய் வழக்குவைக்கும் படி அவ்வூர்க் லெச்றரும், மஜிஸ்திரேத்தும். பொலீஸ்தலைவருக்குக் கட்டளை செய்தனரென்றும், சோதிடர் ஒளித்து விட்டனரென்றும் ஓர் இந்திய பத்திரிகை கூறுகின்றது.

போதா, டீயுவேற், டீலாறியென்னும்போவர் தளகர்த்தர்மார் இங்கிலந்திலே மெஸ். சேம்பளேனைக் கண்டு, சமாதான நிபந்தனைகளுட் சிலவற்றை இலகுவாக்கும்படிக்கும், போவர்களுக்குச் சில சலாக்கியங்கள் கொடுக்கும்படிக்கும் வேண்ட, அவர் மிகுதியானவற்றை மறுத்துவிட்டனர். அவர்கள் இப்போது ஐரோப்பாவின் மற்றுந் தேசங்களைச் சுற்றிப் பிரயாணஞ்செய்து யுத்தத்தினுற் கஷ்ட நஷ்டமடைந்திருக்கும் போவர் சனங்களுக்குதவி செய்வதற்காய்ப் பணஞ்சேர்க்கும் முயற்சியிற் திரிகின்றனர். காணகி உருக்குக் கம்பனியைச் சேர்ந்தவராகிய மெஸ். பிப்ஸ், ஒருலட்சம் டலர் (3 லட்சம் ரூபாய்) உபசரித்தனர். தம்மைப் பின்பற்றி வந்து யுத்தஞ் செய்ததினுல் நட்டமடைந்த சனங்களுக்குதவி செய்வது தங்கடமையென்றுணர்ந்தனர்போலும். கிறிற்சிங்கர், பூச், யூபேட் ஆகிய தளகர்த்தர்மார் பிரசங்கஞ்செய்து பணஞ்சேர்க்கும் நோக்கமாய் இங்கிலாந்தைத் தரிசித்துக்கொண்டு அமரிக்கா செல்லப் புறப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அங்கிலேயர்க்குக் கீடங்கித் தென் ஆபிரிக்காவிலே சமாதான ஆளுகை ஸதாபனமாவதற்குதவிசெய்யும் போக்குடையவர்களாயிருக்க, மெஸ் குறூகர், டக்தர் லேட்ஸ். றீட்ஸ் என்பவர்கள் தென் ஆபிரிக்காவிலே அங்கிலேய ஆளுகைக்கெதிரானவோர் கட்சியுண்டாக்கி எதிரிடை செய்தல் வேண்டுமென்னும் போக்குடையவர்களாயிருக்கின்றனர். இதினுல் இருபகுதியாருக்கு மிடையிற் பிளப்புண்டாயிருக்கின்றது. மெஸ். குறூகர் தென் ஆபிரிக்காவை விட்டு வந்தபோது தம்முடன் கொண்டுவந்த பணத்துக்குக் கணக்குக் கொடுக்கும்படி போவர் தளகர்த்தர்மார் டக்தர் லேட்ஸ் மூலமாய்க் கேட்டிருக்கின்றனராம். போவர் தளகர்த்தர்மாரி லொருவராகிய றிட்சேட் என்பவரும் அவரைச்சேர்ந்தோரும் தாம் மடகாஸ்கர்தீவுக்குப்போய்ப் பிரான்சுப்பாஷை படித்துப் பிரான்சுக்காரராக வாக்குப்பண்ணித் தமக்குக் குடியிருக்கவும், ஆடுமாடு வளர்க்கவும், பயிர்செய்யவும் விஸ்தாரமான நிலந்தரும்படி கேட்டிருக்கிறுர்கள்.

அங்கிலோ ராச்சியத்துக்கு முள்ளுப்போலிருந்து எப்பொழுதும் குளப்பங்களுஞ் சதிமோசங்களுஞ்செய்வது, அயர்லந்து தேசமென்பது யாருமறிந்த விஷயம். புதிய பிரதிகாவலராகிய லோட் டட்லி அவ் உத்தியோக மேற்கும் இந்நாட்களிலும் ஐறிஷகாரர் பலவிடங்களிற் கொதித்தெழுந்து கலகம் விளைக்கின்றனர். அங்கிலோ பாளிமேந்து சங்கத்தில் ஐறிஷகாரரின் பிரதிநிதிகளாயிருக்குஞ் சிலரும் தங்கள் பேச்சினுலும் செய்கையினுலும் கலகக் காரணராகி மறியல் விதிக்கப்பெற்றனர். பாளிமேந்து சங்கத்தவர்களாகிய மெஸ. றெடி, மெஸ். பேக், மெஸ். றெட்மொண்ட், மெஸ். ரேவ்ஷ் என்பவர்கள் முறையே 2, 1, 6, 4 மாசங்களுக்கு மறியற்தண்டனை பெற்றனர். இன்னுஞ் சிலர்க்கெதிராய்க் கட்டளைகள் சென்றிருக்கின்றன. கலகம்பண்ணும் இடங்களிலே சேனைவைப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

சீனுவின் நடுப்பாகத்திலே "பொக்சேவ்ஷ்" என்னுங் கலகக்காரர் சில நாடகளின் முன் எழுந்து அவுஸ்திரிய மிஷனரியாகிய மெஸ். புறூஸ் என்பவரையும், அங்கிலேய மிஷனரியாகிய மெஸ. லூயிஸ் என்பவரையுங் குரூரவதை செய்து, கிறிஸதவர்களிலும் 10 பேரைக்கொனறனர். இப்போது மேய்க்கோன் என்னுமிடத்திலிருந்தஉள்நாட்டு மிஷன்ஸதாபனங்கள்முழுவதையுமழித்துப்போட்டனர். தன்லியென், சங்கியு, கியாற்றங் என்னும் பட்டினங்களையும் பயமுறுத்துகின்றனராம். சீனச்சக்கிரவர்த்தி கலகக்காரரை அடக்கும்படி சேனைகளை யனுப்பியும் கலகக்காரர் அவர்களைச்சட்டைபண்ணவில்லை. மிஷனரிகள் தாங்கள் கொடுக்கிற மருந்தில் நஞ்சைச்கலந்து கொடுக்கிறுர்களென்றும் வேறு பலவகையாயுமே சனங்களைக்கலகத்துக்கெழுப்பிவிடுகிறுர்.

மலாயாக் குடாநாட்டிலேபீராக்குக்குக்கிழக்கேயிரும் கிலண்டன் என்னும் சிற்றரசு நாடு சீயதேச ராசாங்கத்துக்கீழ்ப்பட்டு அதற்குக் கப்பங்கட்டி வருகிறது. சில நாட்களின்முன்னே சீயதேச அரசாட்சியார் தமது தேயத்திலிருந்து கொண்டுவந்திறக்கப்படுஞ் சாமான்களுக்குத்தீர்வை வாங்கப்படாதென்றும் சிங்கப்பூர் ஆதிய பிறவிடங்களிலிருந்து வருஞ சாமான்களுக்குத் தீர்வைவாங்குதல் வேண்டுமென்றுங் கிலண்டனின் சிற்றரசனை நெருக்க அவன் மறுத்து சீக் போர்வீரர் 300 பேரை வரவழைத்து பிரித்தானியரையும் உதவிகேட்டனன். தொடுவாய் ராச்சிய தேசாதிபதியாகிய சேர் சுவேற்றென்காமும் ஓர் யுத்தக்கப்பலில் அவ்விடஞ் சென்றனர். இதைக்கண்டு சீய அரசாட்சியார் பதமையாகி, கிலண்டனில் இறக்கப்படும் சீயதேச சாமான்களும்அங்கிலேய சாமான்களும் ஒரேவகையாகவே தீர்வையிடப்படுதற்குச் சம்மதித்துவிட்டனர். கிலண்டனின் சிற்றரசனுகிய மலாய ராசன் சீயத்துக்குக் கப்பங்கட்டுபவனுயினும் அங்கிலேயரின் நண்பனுயிருக்கின்றனனும்.

## கடிதம்.

கனந்தங்கிய உதயதாரகைப்பத்திராதிபரவர்களுக்கு.

ஐயா!

உதயதாரகை 62ம் புத்தகம் 20ம் இலக்கச் சஞ்சிகையில் நூதனவைத்தியமென முகவுரைதீட்டி மானிப்பாய்க்கடிதர் வெளிவிட்ட பாயிரத்தை நான் திருப்பித்திருப்பி வாசித்தேன். நீங்களுமிப்படியே வாசித்திருப்பீர்களென்று நம்புகிறேன். அந்தப்படி கடிதத்தைப்பிரசரிக்க நீங்கள் சம்மதித்ததுமகாச்சரியம்.

ஐயா! கனந்தங்கிய Dr. T. B. Scott அவர்களுடைய வைத்தியதிறத்தைப்பற்றி யாழ்ப்பாணத்தில்மாத்திரமல்ல இலங்கை, இந்தியா, தொடுவாய்நாடுகளெங்குமுள்ள பலர் மெத்த மேலானகருத்துடையவர்களாயிருக்க, கடிதரோ ஐயரவர்களை உயர்த்தப்போய்ச் செய்வதின்னதென்றறியாமற் தாழ்த்திப்போட்டார். என் நினைந்தென்செய்தாரோ உற்றுணர்க. சாதாரணவைத்தியர்களுக்கு மெத்த லேசானகாரியத்தைக்கொண்டு எவரும் வியக்கத்தக்க நூதன வைத்தியங்களுக்குறைவிடமாய் விளங்கும்பண்டிதசிரோன்மணி கனம் Dr. T. B. Scott அவர்களுடைய திறத்தை வெளிப்படுத்தநினைத்த செயல், சூரியனை விளக்கினிற்காட்டத் துணிந்தவன் செயலுக்கொப்பாயிருக்கவில்லையோ என்பதைச் சற்றே சிந்தித்துப்பாருங்கள்.

ஐயரவர்கள் தம் கனிஷடபுத்திரனுக்குண்டாய டிவ்திரியா (Dipahtabaria) என்னுங் குரூரரோயினிமித்தஞ் செய்த சத்திரவைத்தியதிறத்தையும், ஒவேரியன் தியூமார் (Ovarian Tumours) என்னும் கருப்பாசயக் கழலைகளைக்கிறிக் கிழித்து அனுகூலப்படுத்திய சித்திர திறத்தையுமறிந்திலர்போலும். ஐயரவர்கள் திறத்தை விளக்கற்கேற்ற செயல்கள் இன்னுமநேகமுண்டாயினும், அவர் திறத்தை இவ்விதம் விபரித்தலவசியமின்ருதலினிவ்வளவில் விடுகிறேன்,

இங்ஙனம்,
M. Y.

'JESUS BIDS US SHINE.'

1. மின்னொளி வீசு
என்கிறுர் யேசு;
சிறுவிளக்கேனும்
இருள் நீக்குமே
பாப இருள்போக
தீபமேற்றுவோம்;
—நீ உன் சிறுவீட்டில் நான் எனதில்

2. மின்னொளிவீசு
எனக்காய் என்று
சொன்னவர் அதோ நம்
முன்னே நிற்கிறுர்;
மங்கி எரிந்தால் அத்
துங்கன் அறிவார்
—நீ உன் சிறு வீட்டில் நான் எனதில்.

3. மின்னொளி வீசு
இருள் சூழுது;
பாப அந்தகாரம்
எங்கும் மூடுதே;
தேவகோப சாபம்
நீங்க ஏற்றுவோம்;
—நீ உன் சிறு வீட்டில் நான் எனதில்.

D. D.

### MR. G. S. EDDY'S MISSION IN JAFFNA.

The following dates have been finally fixed upon for the Conventions:—

| | | |
|---|---|---|
| October | 7 and 8 | Church Mission field. |
| Do. | 9 „ 10 | American Mission field. |
| Do. | 11 „ 12 | Wesleyan Mission field (Pt. Pedro) |
| Do. | 14, 15 and 16 | United Convention in Fort Church, Jaffna. |

It was resolved that detailed arrangements for all the Conventions except that in the Fort Church be left to the various Mission bodies, the representatives of those bodies on this Committee being responsible; and that copies of the programme of meetings to be held in each field be distributed in good time among the Pastors of all the three Missions.

It was resolved also that two meetings daily be held in the Fort Church, between 8 and 9 a.m. and at 6 in the evening—these meetings to be in Tamil and any arrangements for English meetings to be left over until the Missioners have been consulted. [We learn that a meeting in Engilsh and Tamil will be held at 3 P. M. and another meeting at 11 A. M. *Ed. Star.*] The Committee authorised the printing of 50 posters and 1,000 hand bills for these services.

Again it was resolved that entertainment for visitors from a distance be provided on each field at a charge of 5 cents for a morning and 10 cents for a noon or evening meal.

It was announced that the names of the Missioners are George. S. Eddy, Ph. B., Y. M. C. A. Secretary for Southern India, V. S. Azariah, Tamil Secretary of Y. M. C. A. and Mr. Paramanandam.

The purpose of a convention is to meet with God. It is not so much to meet with men. We receive little from men, but if we go to this convention Oct. 14–16 to meet with God, life may be changed for us. Jacob met God for a night "and he blessed him there"—then and there. His nature and his name were changed. Shall God bless us here these days ? It will depend upon whether we come to meet Him in faith with the determination "I will not let Thee go except thou bless me", or whether we go to hear and criticise men. A critical spirit cannot receive a blessing. George Herbert says "Deign to pick out treasures from an earthen pot." Men are vessels of clay but God's treasures may be had for the asking this week. Think of it three days *with God*. What shall they mean to my life? Do I need blessing? God is asking, "What wilt thou that I should do unto thee"? What shall be my reply? The crowds heard the Master's words, but one touched Him and power flowed forth. Shall I touch God this week? Let us bear up these meetings in prayer. Let us attend every session and secure the attendance of all we can, for "surely God is in this place." If I go I may meet with God. If I bring some one else he may be blessed.

### THE POWER OF PRAYER.

*(Contributed.)*

"More things are wrought by prayer than this world dreams of." For prayer is the most patent force in the universe, the greatest power given to man to wield. It is prayer that receives the Spirit, conquers sin, receives labourers and funds for our work, gives power for service and turns defeat to triumph. It was in prayer that wrought the mighty works of the apostolic church. Prayer was the power of the reformation, and by it Luther brake the spell of ages. John Knox in nights of prayer cried "give me Scotland or I die," and God gave him Scotland. The revivals under Wesley in the 18th century were born in hours of prayer, and the great awakening of that century in America was preceded by the prayers of men like David Brainerd, and by Jonathan Edwards call to prayer. The revivals of 1830 under Charles Finney began in days of prayer and fasting. The great revival of 1857 in America originated in a prayer meeting in Fulton street of only six young men. The mighty revival in Ireland and Scotland in 1859 has been traced to four young men meeting in an old school house for hours of prayer. In the recent awakening in Japan where over 20,000 converts and inquirers were added to their previous 40,000, the movement began in prayer. In Australia the present revival with its thousands of converts began with a little praying band who held on for ten years for "a big revival". In India also a spirit of prayer is spreading in every presidency among the missionaries and thousands of native Christians are praying for the awakening of India. And He will do it. For it is God's memorial that in every age he hears and answers prayer. Why then have we prayed so little? Behold He will work a work in our day, if we will but believe. Is an awakening needed in Ceylon? Is it His will? Is it God's will that men should be saved, that Christians should rise to the full privilege of life in Christ, that they should be awakened to service for the unsaved? This is an awakening, and this is God's will revealed in his word. But if we ask anything according to His will He heareth us. Shall we ask then for Ceylon at this time? The various missions of the churches to the Islands and to India, the new evangelistic movement, and the churches themselves all need more prayer. The special meetings of this month in the churches and colleges and the united convention in the Fort Church Oct. 14, 15 and 16 are opportunities for calling down the power of God upon our work. The coming day of prayer for India and Ceylon on *Sunday Nov.* 16 which will be observed by thousands in missions all over India and Ceylon will be a signal, opportunity to prove whether we believe in the power of prayer. God waits to fulfil His promise "Ask and ye shall receive.," If we have failed the cause is not far to seek "ye have not because ye ask not," for "this kind cometh out by nothing save by prayer." Let us pray and pray daily for the awakening of Ceylon. Let us pray for men by name until we see them saved. Let us pray and pray till we prevail; for prayer is power, it is the chief method of accomplishment, it is the missing link between us and God. Do I believe it? Am I doing it? Shall I from to day?

### CRIME IN CEYLON.

The report of the Solicitor-General, Mr. P. Ramanathan, C M G. for 1901 is full of statistics some of which may be of interest to our readers. For example, the nationality of those convicted and sent to jail is seen by the following figures Sinhalese 4,911 or 212 in every 100,000, Tamils 1,420 or 141 in every 100,000, Moors 392 or 189 in every 100,000, Burghers 56 or 193 in every 100.000. According to these figures the Sinhalese are the worst and the Burghers next while the Tamils are much better off. We omit the European and Malay population as being too small to draw comparisons with. The large majority of the criminals are male, only about 2 per cent of the total being female.

We note also with surprise that the number who suffered capital punishment last year was 47 which is four less than for 1900 but considerable higher than the average for the past ten years. The number sentenced for 5 years and above was 115 which is a much larger number than for any year since 1892, on that year the number reaching as high as 130.

Again the number of murders, culpable homicide and attempt to murder mounts up to 223 which is 50 per cent higher than for any previous year of the decade. So taking other crimes for the decade and comparing the statistics for 1901 with them, we find an alarming increase of crime the past year for which the Solicitor-General gives no explanation. Why is it that it is so? Are those whose business it is to look after the law breakers more active in bringing offenders to justice than formerly? Or are the headmen too lax in keeping order? Or are the inhabitants of our fair Isle really growing worse? Something is wrong, and the sooner we find out the causes and remedy them, the better for us as a people.

### SUNDAY SCHOOLS.

The Indian S. S. Union has sent out a call for universal intercession for Sunday Schools on Sunday and Monday, the 19th and 20th, Special services will be held in Jaffna where Mr. G. S. Eddy has promised to take part, and in other churches of our peninsula. We give in full the "appeal" of the committee.

"Assuredly we have much for which to thank God. Ninety and nine years ago the Sunday School cause in India was but a small and single seedling. Under the blessing of Almighty God we now have 8,000 Schools with an aggregate membership of 12,000 Teachers, and 321,000 Scholars. And still the great tree shows no sign of decay ; on the contrary it gives evidence of infinite future usefulness and expansion. While fully conscious of many defects in our Sunday School Movement we also see very much for which to thank God most devoutly.

Our thanksgiving should be co-mingled with supplication and prayer. In the petitions neither pastors, parents, officers nor teachers should be forgotten. All of them need a fuller consecration to Christ, a stronger passion for souls, and a more intelligent knowledge of Scripture.

Intercessory personal prayer, in solitude, is perhaps the mightiest means of usefulness this side of the grave. Pastors and parents will surely pray for the young belonging to the Church and the home. To reach each Sunday School member *via* God's throne of grace is a work which should engage the special attention of officers and teachers. Let the Sunday School Superintendent write out a list of his teachers and his knowledge of each will give reality to his supplications. Let the teacher make a similar list of his scholars *agonizing for each in turn*. "The supplication of a righteous man availeth much in its working." Who can measure the far reaching results of personal wrestling with God in secret tor those whom we are trying to direct to Christ?

God, even our God, is the great Hearer, Encourager and Answerer of prayer. He loves to hear His children pray and in response will not give stones for bread. Does God hear prayer ? Prove Him and see! It is declared that the Bible contains irrespective of the Psalms, 667 cases of direct personal prayer for a specific purpose, and 454 answers to those prayers can be traced. Does the Bible encourage belief in answered prayer? Study and see!

We call upon God's Remembrancers in Southern Asia, to unite with God's Remembrancers in other parts of the universe, to take no rest, and give Him no rest, till he establish, and till He make Jerusalem a praise in the earth. Thus, on October the 19th and 20th, as the sun goes forth from his chamber, bathing successfully each section of our sphere in light, he will awake Christians from sleep to fill the ear of God with intense, definite and persistent intercession for the world-wide Sunday School Membership of 25 millions."

### WOMEN'S MISSIONARY SOCIETY.

The third annual meeting of the Women's Missionary Society was held at Uduvil on Friday the 26th Ult. There was a good audience present and the exercises passed off very pleasantly. The President Miss S. R. Howland made the opening address and then called upon the Secretary and Treasurer to give their reports. It seems that the membership is now nearly 300 and the amount of money raised including a large balance of last year's was Rs. 1,187.17. The expenditure was Rs. 405.29 leaving a large balance on hand at the end of the year. This was due partly to the fact that for some months there was no one employed by the mission.

With the new year a Bible Woman has been sent to Tondi, and a teacher is soon to be employed.

The audience then listened to some very earnest and good addresses from Mrs. S. Hensman, Mrs. John Bicknell, Mrs. Muttiah, Mrs. Edith David, and Miss Faith Hunter, after which officers were elected and the meeting brought to a close. We pray that the year upon which this Society has now entered may prove to be one rich with blessing.

### BATTICALOA.

WEATHER. The weather here is yet very hot and dry. The scarcity of water is felt especially by the poorer classes.

SCHOLASTIC The schools here have all commenced work after the mid-summer holidays.

PERSONAL. Mr A. Eliot, Chartered Accountant of Colombo, who was here for a few days, left for Colombo by the "Lady Gordon" on Wednesday.

Rev.W.M.Wilkes, Principal of the Wesleyan Central Institution has gone to Trincomalie for a short change

SPORTS. The members of the Batticaloa Cricket and Athletic Club, who went to Trincomalie on a cricketing tour, have returned.

[Continued from page 1.]

**Ceylon Steamer.** The next steamer to Jaffna will call at the Jaffna Port instead of at Kangesanturi, and they will so continue till the south west monsoon. There is much traffic by the steamers from Colombo to Jaffna and vice versa, in so much that very often 25 per cent of the cargo is shut out to the great in convenience of the shippers. Com

**Karisal Mission.** The Jaffna Wesleyan church held its 17th annual meeting of the "Home Mission" to Karisal, on the 30th ultimo. Mr. T. M. Tampoe presided. The report of the secretary reported over 40 conversions in the field and the income for the year to the society was about Rs. 1400. Com

**Neervalli.** We learn that a dozen police men with a sergeant are stationed at Neervalli, and it is said that arrangements are being made to tax the villagers for the upkeep of the force. We are glad to report, that Mr. Rudd is on the alert to suppress all rowdyism. Com

**Correction.** Our Jaffna correspondent in the *Star* of Sept. 11th made a mistake in calling Dr. Appadurai Joshua a planter. He is the *son* of Mr. Joshua of Uduvil Jaffna (now a planter at Hatton) His brother Mr. Ayadurai Joshua was one of those, who was successful in the Proctors Final examination.

—**The Jaffna Christian Provident Association.** The Tenth Annual Meeting of the members of this association was held at the Jaffna Central College Hall on Thursday the 18th instant at 5 P M. A very large number of members was present. The Rev. W. T. Garret B. A., President of the Association was in the chair. After devotional exercises the Rev. J. T. Appapillai was called upon to move the first Resolution, which was the cheif item of business on the Agenda, viz—"This meeting resolves that the nominees of members who pay yearly eight calls at the old rate be entitled to a bonus of Rs. 250 each ; and the nominees of members who pay four calls be entiled to a bonus Rs. 125." The mover in a lucid speach, pointed out by facts and figures, that the Association would certainly collapse in another ten years or so if the proposed change in the constitution could not immediately be effected. The Rev. S. Morse seconded. The President, the Secretary, Rev. T. P. Hunt, G. Champion, Messrs. S. T. Thambapillai, R. A. Kunanayagam, Jacob Vallupillai and several others spoke in support. The Resolution was carried by a large majority.

Although a motion for the winding up of the Association was introduced by some, the attempt was feeble, and consequently it failed to enlist the sympathy of the meeting.

After attending to other minor items of business, the meeting came to a close with prayer and benediction by the chairman. Com.

Printed at the Press of Strong and Asbury, Manepay.
Published by A. C. Mission and Tambyah Strong Cooke.